## எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி – 2015

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. அக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினது அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

2008 ஆம் ஆண்டில் மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்ட நாலந்த பெருந்தோட்டத்தின் 55.94 ஹெக்டயர் காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குத்தகை ஆதனங்கள், பொறித் தொகுதி உபகரணங்கள் எனக் காட்டப்பட்டிருந்ததுடன், அது முதலீட்டுச் சொத்தாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் நியதிச்சட்டப் பணத்தைச் செலுத்தாத காரணத்தால் கொடுப்பனவு செய்ய வேண்டிய தண்டப்பணச் செலவினத்திற்கு நிதியேற்பாடு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 94,561,208 ஆகும். எனினும், ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 29,515,782 ஆகும். அதற்கமைய, மீளாய்வாண்டிற்குரிய நிதியேற்பாட்டுக் குறைவு காரணமாக கம்பனியின் இலாபம் ரூபா 65,045,427 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது குத்தகை வாடகைக் கடன்கொடுத்தோருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட தாமதக் கட்டணமாகிய ரூபா 121,763 வட்டிக் கொடுப்பனவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 34,043 ஆன தொகை இனங்காணப்பட்டு உரிய கணக்கிற்கு மாற்றப்படாது ‘‘வங்கி வழூக் கணக்கு’’

(Bank Errors Account) என்ற பெயரில் ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) நெடுங்காலமாக செயலற்றிருந்த 6 கணக்குகளது கூட்டுத் தொகையாகிய ரூபா 1,669,204 வரவு மீதிகள் மற்றும் 3 கணக்குகளது கூட்டுத் தொகையாகிய ரூபா 1,158,899 செலவு மீதிகள் என்பவற்றை இனங்கண்டு கணக்குகளில் அதற்கான சீராக்கல்களை மேற்கொள்வதற்குக் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மின்சார சபையினது மின்கோபுரத்திற்கு பாதையை அமைக்கும்போது ரூபா 1,887,100 இழப்பீடு வழங்கப்பட்டு அகற்றப்பட்ட நாலந்த பெருந்தோட்டத்தின் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாத இறப்பர் மரங்களை இனங்கண்டு அவற்றினது பெறுமதியைப் புத்தகங்களில் நீக்கிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான ரூபா 223,720 தொகையான அட்டுறு மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி செலவினம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கம்பனிக்குரிய 8 பெருந்தோட்டங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் நடைமுறைக் கணக்குகளுக்கிடையே ரூபா 2,213,374 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களுக்கெதிரே போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| வாகனம் | 4,107,409 | வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகனச் சம்பவப் பதிவேடுகள் |
| காப்புறுதி இழப்பீடு | 260,647 | காப்புறுதி உறித்துக்கோரலுக்கான பதிவேடு |
| உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | 550,544 | இழப்புப் பதிவேடு, செடிகளை வழங்குவது தொடர்பான பதிவேடு |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 நடைமுறைக் கணக்குகளது வரவு மீதியாகிய ரூபா 5,168,837 நெடுங்காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது. அவற்றை அறவிடுவதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் கம்பனி மேற்கொள்ளவில்லை.

(ஆ) மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,367,650 கூட்டுத் தொகையுடைய 15 விற்பனைக் கடன்பட்டோர் மீதியினை அறவிட அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தேயிலைத் தொழிற்சாலைக் குத்தகையாளர்களுக்கு தேயிலைக் கொழுந்தை வழங்கியதற்கு 2015 ஆகஸ்ட் முதல் கம்பனி பெறவேண்டியிருந்த தொகை ரூபா 67,301,948 ஆகும். இதில் ரூபா 43,782,265 தொகை 30 நாட்களுக்கு குறைவான காலப்பகுதியில் பெறவேண்டிய மீதியாகக் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வில் காட்டப்பட்டமையால், அது சரியானதா என்பதைக் கணக்கில் திருப்தியடைய முடியவில்லை.

(ஈ) பண்டாரபொல தொழிற்சாலை 2006 ஜுன் 28 ஆந் திகதியன்று தனியார் கம்பனி ஒன்றிற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டு, வழங்கப்பட்ட தேயிலைக் கொழுந்து மற்றும் அதனோடிணைந்த வருமானம் தொடர்பாக மீளாய்வாண்டு முடிவில் அந்நிறுவனத்திடம் இருந்து பெற வேண்டிய ரூபா 31,809,179 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) ஆண்டின் ஆரம்பத்தின்போது 11 வெளி நபர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த செலவு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 18,510,358 ஆகும். இது கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்படுத்தப்படாது ஆண்டு பூராகவும் செயலற்றிருந்தது. எனினும், அம் மீதியைத் தீர்த்துவைப்பதற்குத் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.9 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது ரூபா 429,550 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.12 ஆம் பந்தி | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாது நலன்புரி நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீதி ரூபா 1,667,009 ஆகும். |

| | |
|---|---|
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) கம்பனித் தலைவரினதும் பொது முகாமையாளரினதும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு 2015 திசெம்பர் மாதத்தின் போது எரிபொருள் செலவினத்தினை மிகைத்து முறையே ரூபா 22,850 மற்றும் ரூபா 23,250 என அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| | (ii) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 2 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 25,000 வீதப்படி போக்குவரத்து படிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்கென 2010 முதல் கம்பனியால் வழங்கப்பட்டிந்த மொத்தச் செலவினம் ரூபா 2,100,000 ஆகும். மேலும், குறித்த ஒரு உத்தியோகத்தருக்கு மாதாந்தம் எரிபொருள் படியாக ரூபா 8,000 வழங்கப்பட்டிருந்ததுடன், 18 மாதங்களின்போது அதன் பொருட்டு கம்பனி செலவழித்த தொகை ரூபா 144,000 ஆகும். |
| | (iii) கம்பனிக்குரிய 2 வாகனங்கள் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற இரு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது எரிபொருளுக்கு வழங்கப்பட்ட செலவினம் ரூபா 305,308 ஆகும். |
| (இ) 2006 பொருள் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டல் | போட்டியுடனான கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்கு 21 நாள் அவகாசம் வழங்கப்பட வேண்டுமாயினும், ரூபா 16,857,785 பெறுமதியான 4 கொள்வனவுகளின்போது 10 முதல் 17 நாட்கள் வரையான கால அவகாசம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

------------------------------

### 3.1 நிதி விளைவுகள்

--------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவு ரூபா 26,922,929 பற்றாக்குறை ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,402,163 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில்

ரூபா 57,325,092 நலிவு தென்படுகின்றது. மீளாய்வாண்டில் தாவரவியல் சொத்துக்களின் மூலம் பெறப்பட்ட இலாபமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 83,949,382 குறைவடைந்தமையே நிதிசார் விளைவின் நலிவுக்கு முக்கிய காரணியாக அமைந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக பற்றாக்குறை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 30,402,163 மிகை ஏற்பட்டிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டில் அது மீண்டும் ரூபா 26,922,929 பற்றாக்குறை ஆகியது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 256,242,435 ஆகவிருந்த கம்பனியின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டு வரை படிப்படியாகக் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மீண்டும் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 302,034,960 வரை அதிகரிப்பு ஏற்பட்டிருந்தபோதும், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 270,872,480 வரை குறைவு ஏற்பட்டிருந்தது.

## 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

### 3.2.1 விரிவான வருமானக் கூற்று

| வருமானம் | 2015 | 2014 | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 279,329,596 | 285,583,136 | -2 |
| ஏனைய வருமானம் | 38,010,205 | 33,706,327 | 13 |
| வருமானம் | 2,679,936 | 3,457,669 | -22 |
| **செயற்பாட்டு செலவினம்** | | | |
| விற்பனைக் கிரயம் | 311,986,186 | 345,801,375 | -10 |
| நிர்வாகச் செலவினம் | 26,215,237 | 20,705,368 | 27 |
| நிதிச் செலவினம் | 9,421,863 | 10,468,229 | -10 |

(அ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது வருமானம் 22 சதவீதம் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் 27 சதவீத குறைவைக் காட்டுகின்றது.

### 3.2.2 பிரதான உற்பத்திப் பொருள்களது இலாபத் தகவு

பிரதான உற்பத்திப் பொருள்களது இலாபத்தகவு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு ஆகிய இரண்டுடனும் ஒப்பிடப்பட்டுக் கீழே காணப்படுகின்றது.

| உற்பத்தி | மொத்த இலாபத்தகவு (சாதகமானது/ (பாதகமானது)) 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தேங்காய் | 17,836,756 | 25,700,709 | (9,861,038) |
| இறப்பர் | (7,831,614) | (15,434,261) | (2,141,463) |
| தேயிலை (கொழுந்து) | (46,792,449) | (88,000,596) | (82,912,681) |
| கொக்கோ | 1,236,553 | 1,444,264 | (1,377,142) |
| ஏனையவை | 2,894,164 | 16,071,645 | 29,566,124 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் பால் விற்பனையில் ஏற்பட்ட நட்டம் மீளாய்வாண்டில் தொடர்ந்து காணப்பட்ட போதிலும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 49 சதவீத குறைவைக் காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் காயாத தேயிலைக் கொழுந்து விற்பனையால் ஏற்பட்ட இழப்புத் தன்மை ரூபா 41,208,147 குறைவடைந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி 753,130 கிலோகிராம் அதிகரித்தமையே அதற்கான காரணமாகும்.

(இ) தேங்காய் விற்பனையால் பெறப்பட்ட இலாபம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி 753,130 கிலோகிராம், அதாவது 31 சதவீதம் குறைவடைந்திருந்தது.

(ஈ) ஏனைய பயிர்வகைகளின் மூலம் 2013 ஆம் ஆண்டில் ஈட்டிய ரூபா 29,566,124 வருமானமானது மீளாய்வாண்டின்போது ரூபா 2,894,164 வரை குறைவடைந்திருந்தது. மிளகு மற்றும் கராம்பின் வருமானக் குறைவு இந் நிலைக்குக் காரணமாகும்.

### 3.2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கம்பனியின் மீளாய்வாண்டினது முக்கிய சில விகிதாசாரம் பின்வருமாறு.

| | 2015 | 2014 |
|---|---|---|
| மொத்த இலாபம் (நட்டம்) விகிதம் | 11:67 | 21:08 |
| நடைமுறை விகிதம் | 0.21:1 | 0.14:1 |
| உடனடி விகிதம் | 0.21:1 | 0.13:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மீளாய்வாண்டு இலாபத்தகவு நலிவடைந்திருந்தமையும் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மிகவும் நலிவடைந்த நிலையில் இருப்பதும் குறுகிய கால நிதித் தேவைகளை ஈடுசெய்வதற்குப் போதுமான தொழிற்படு மூலதனம் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயல் முன்னேற்றம்

#### 4.1.1 வரவு, செலவுத்திட்ட இலக்கை எய்துதல்

செயல் முன்னேற்ற அறிக்கை, கூட்டிணைந்த திட்டம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது எய்துவதற்கு எதிர்பார்த்த பிரதான இலக்குகள் மற்றும் அவற்றை அடைவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பான விபரம் வருமாறு.

| விடயம் | பயிர்க்காணி விரிவாக்கம் | இலக்கு | உள்ளபடியான நிலைமை | உள்ளவாறான நிலைமை, இலக்கின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| தேங்காய் விளைச்சல் (காய்கள்) | 277.66 | 1,123,500 | 969,648 | 86 |
| தேயிலைக் கொழுந்து (கிலோ) | 833.18 | 3,727,240 | 4,007,384 | 107 |
| கிறேப் இறப்பர் (கிலோ) | 282.19 | 130,000 | 81,888 | 63 |
| கொக்கோ (கிலோ) | 235.14 | 16,000 | 6,619 | 41 |
| மிளகு (கிலோ) | 31.95 | 12,000 | 246 | 2 |
| கராம்பு (கிலோ) | 6.00 | 8,500 | 0 | 0 |
| வாழை (கிலோ) | - | 60,000 | 0 | 0 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது பாதீடு செய்யப்பட்ட தேங்காய் விளைச்சலில் 86 சதவீதத்தை அடைய முடிந்ததுடன், ஹப்புகஸ்பிட்டிய தோட்டத்தில் உள்ளவாறான தேங்காய் விளைச்சல் பாதீடு செய்யப்பட்ட விளைச்சலின் 28 சதவீதம் மாத்திரமே ஆகும்.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட கொக்கோ பயிர்ச் செய்கையின் விளைச்சல் 41 சதவீதம் பெறப்பட்டிருந்ததுடன், ஹப்புகஸ்பிட்டிய தோட்டத்தில் 151 ஏக்கர் கொக்கோ பயிர்ச் செய்கையில் மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட கொக்கோவினது விளைச்சல் 2361 கிலோகிராம் ஆகும்.

(இ) மிளகுப் பயிர்ச்செய்கை 12,000 கிலோ கிராமாக எதிர்பார்க்கப்பட்ட போதும், உள்ளவாறு பெறப்பட்டது 2 சதவீதத்தைக் குறிக்கும் 246 கிலோ கிராமே, அதாவது, 2 சதவீதம் ஆகும். இதற்கமைய, மிளகு விளைச்சல் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கராம்பு, வாழை ஆகியவற்றின் பயிர்ச் செய்கை மூலம் கம்பனி மீளாய்வாண்டின் போது எதுவித விளைச்சலையும் பெறவில்லை.

#### 4.1.2 மாகாணப் பெருந்தோட்டங்களினது செயல் முன்னேற்றம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளினது 09 மாகாணப் பெருந்தோட்டங்களுக்குரிய இலாப/ (நட்ட) நிலைமை பின்வருமாறு.

| பெருந்தோட்டம் | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பண்டாரபொல | (7,597,975) | (14,467,836) | (11,390,467) | (6,941,457) | (12,599,460) |
| எல்கடுவ | (11,751,702) | (12,042,377) | 6,445,996 | (12,528,544) | (4,638,902) |
| ஹூணுகல | (9,115,648) | (7,181,131) | (12,869,561) | (3,764,065) | (8,302,021) |
| பிட்டகந்த | (17,763,884) | (21,148,517) | (22,362,855) | (25,492,583) | (13,234,017) |
| ரத்வத்த | (15,458,537) | (617,512) | (2,142,766) | (9,691,574) | (26,616,845) |
| செலகம | (4,808,665) | (7,676,885) | (4,836,483) | (2,456,574) | (2,937,398) |
| ஹப்புகஸ்பிட்டிய | (3,659,282) | (1,970,155) | 4,855,460 | 10,336,141 | 13,313,840 |
| மில்லவான | 18,312,216 | 45,035,227 | (2,417,500) | 5,551,977 | 18,115,405 |
| நாலந்த | (9,629,413) | 3,877,446 | (1,502,209) | 4,637,927 | 11,132,604 |
| மொத்தம் | (31,382,890) | (12,251,430) | (46,220,585) | (17,637,927) | (25,766,794) |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கம்பனியினது பெருந்தோட்டங்கள் மூலம் ரூபா 31,382,890 தேறிய நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், ஹப்புகஸ்பிட்டிய மற்றும் மில்லவான பெருந்தோட்டங்களில் மாத்திரம் முறையே ரூபா 3,659,282 மற்றும் ரூபா 18,312,216 இலாபம் ஏற்பட்டிருந்தது. மில்லவான பெருந்தோட்டத்தின் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 59 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் ஹப்புகஸ்பிட்டிய தோட்டத்தின் இலாபம் ரூபா 13,313,840 தொடக்கம் மீளாய்வாண்டில் நட்டமாக ரூபா 3,659,282 வரை குறைவடைந்திருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,877,446 இலாபமீட்டிய நாலந்த தோட்டம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 9,629,413 நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைக்கமைய, கம்பனி 102 வாகனங்களின் உடமையைக் கொண்டிருந்தபோதும், பயன்படுத்தக்கூடிய நிலையிலிருந்த வாகனங்களின் எண்ணிக்கை 47 ஆகும். அதற்கமைய, எஞ்சிய வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக முகாமைத்துவம் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) நாலந்த தோட்டத்தின் 63.75 ஹெக்டயர் காணியில் உள்ள தென்னை மரங்கள் 1916 ஆகும். ஹெக்டயரொன்றில் இருக்கவேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவின் பிரகாரம் ஒப்பிட்டுப் பார்க்கையில் உபயோகப்படுத்தப்பட்ட நிலத்தின் அளவு 2 சதவீதம் ஆகும். அதற்கமைய, காணி பயனுள்ளவாறு பயன்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு ஒக்டோபரில் பிட்டகந்த தோட்டத்தில் ஒரு கிலோ கிறாம் தேயிலைக் கொழுந்து ரூபா 55.29 மற்றும் ரூபா 52.50 என்பவற்றுக்கு இடையேயான விலைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அத்தோட்டத்தின் 843 கிலோ கிறாம் தேயிலைக்

கொழுந்து தொழிற்சாலை ஒன்றிற்கு ஒரு கிலோ கிராம் ரூபா 29.13 வீதம் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ள, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் இனங்காணப்பட்டிருந்த 5 வாகனங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்குக் கம்பனி தவறியிருந்தது.

(உ) 2014 ஆம் ஆண்டில் ரத்வத்த தோட்டத்தில் கராம்பு விளைச்சலை ரூபா 5,400,000 இற்கு கொள்வனவு செய்த கேள்விதாரர் ஒருவரால் நிறுவனத்திற்கு ரூபா 2,500,000 வழங்குவது புறக்கணிக்கப்பட்டிருந்தது. இதனை அறவிடுவதற்கு சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) ரத்வத்த தோட்டத்தில் 281.72 ஹெக்டேயர் மொத்தக் காணியில் தேயிலை பயிரிடப்பட்டு, 51 சதவீதமான 144.51 ஹெக்டேயாரில் விதைத் தேயிலையும் 46 சதவீதமான 132 ஹெக்டயாரில் கிளைத் தேயிலையும் பயிரிடப்பட்டிருந்தன. அவற்றின் பயன்பெறு காலம் முடிவடைந்திருந்தது. பயிரிடப்பட்ட காணியில் 97 சதவீதம் பயன்பெறு காலத்தினை மிகைத்திருந்ததை முகாமைத்துவம் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) நெல்உள்ள தோட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு உகந்த 150.24 ஹெக்டேயர் காணியிலும் ரத்வத்த தோட்டத்திற்குரிய 34.72 பேர்ச்சஸ் காணியிலும் உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் 20 ஆண்டுகளுக்கும் 60 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அத்துமீறிக் குடியிருப்போர் கைப்பற்றியிருந்தபோதும், அக் காணியின் உரித்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இரகசியச் செயலாளர் பதவி வகித்த ஒருவர் தமது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதற்கு எதிராகத் தொடுத்த வழக்கின் தீர்ப்புக்கமைய, பணியாற்ற முடியாதுபோன 32 மாதங்களுக்கும் ரூபா 1,158,432 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. அச் செயலாளர் பதவி வெற்றிடமாவதற்கு முன்பு ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு 16 மாதங்களுக்கு ரூபா 240,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2000, 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தோட்டத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றிருந்த 3 உத்தியோகத்தர்கள் தமது உத்தியோகபூர்வ மனைகளைத் தோட்டத்திடம் ஒப்படைக்காது தொடர்ந்து வசித்து வருவது தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளரால் நிச்சயிக்கப்பட்டவாறு கம்பனியின் தோட்டம் உள்ள வெஸ்டன் மீடியம் வலயத்தில் சாதாரண விலையிலும் குறைவான விலையில் தேயிலைத் கொழுந்து வழங்கப்பட்டதால் 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 6,438,146 மதிப்பீட்டு வருமானம் கிடைக்காது போயிருந்தது.

(ஆ) நாளொன்றிற்கு 18,000 கிலோ கிறாம் தேயிலைத் கொழுந்து உற்பத்தியினைக் கொண்டிருந்த பிட்டகந்த தேயிலைத் தொழிற்சாலை 2002 ஒக்டோபர் முதல் உற்பத்தி நடவடிக்கைகளை இடை நிறுத்தியிருந்ததுடன் அது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(இ) ரத்வத்த தோட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் தேயிலைக் கொழுந்தைப் பறிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட 3 தொழிலாளர்கள் மீளாய்வாண்டின் போது முறையே 4,5 மற்றும் 9 மாதங்கள் என மாதமொன்றிற்கு ஒரு தடவை மாத்திரமே தேயிலைக் கொழுந்தைப் பறித்திருந்தமை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினது செலவினை ஈடுசெய்வதற்கு ரூபா 131,077 ஹோட்டல் விலைப்பட்டியலைக் கம்பனி கொடுப்பனவு செய்திருந்தது.

(ஆ) கம்பனியின் தலைவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டிருக்கையில் கம்பனிக்குச் சொந்தம் அல்லாத அவரது பிரத்தியோக வாகனத்திற்கு எரிபொருள் வழங்குவதற்கு மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 196,115 ஆகும்.

## 4.5 வெளிப்படையான முறைகேடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் பிட்டகந்த தோட்டத்தில் பணியாற்றிய உதவித் தோட்ட அத்தியட்சகர் ஒருவர் வீட்டு வேலையில் ஈடுபட்டிராத பெண் பணியாளர் ஒருவரது பெயரைத் தம்பரகல தோட்டப் பிரிவு செக்ரோலில் உள்ளடக்கி தவறான முறையில் ரூபா 38,922 ஊழியரது சம்பளமாகப் பெற்றிருந்தார்.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பண்டாரபொல தோட்ட அத்தியட்சகரது உத்தியோகபூர்வ மனையில் வீட்டு வேலையாளரெனப் பணிபுரிந்த ஒரு தொழிலாளர் அவ்வுத்தியோகபூர்வ மனையில் கடமையாற்றாது ரூபா 211,568 சம்பளமாகப் பெற்றிருந்தார்.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடைப்போக்கில் உள்ள பணத்திற்குக் காப்புறுதி பெறப்பட்டுள்ள போதும், பணத்தைக் கொண்டு வரும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு "BILLET" படியாக முறையே ரூபா 555,520 மற்றும் ரூபா 486,000 எனும் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பணத்தைக் கொண்டு வருவதற்கு தோட்டக் கண்காணிப்பு வாகனத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வாடகை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,521,621 செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மில்லவான தோட்டத்தில் கீழே சரிந்துள்ள ஏறக்குறைய 5 அடி உயரமான பலா மரத்தை விற்பனை செய்யாது அது இற்றுப் போவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கம்பனியானது 5 தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்த 949,798 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்திற்கு ஒரு கிலோ கிராம் தேயிலைக் கொழுந்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய நியாயமான விலையிலும் குறைவாக தேயிலைக் கொழுந்தைக் கம்பனி விற்பனை செய்தமையால் மதிப்பிடப்பட்ட விற்பனை வருமானமான ரூபா 964,522 இழப்பிற்குள்ளாகி இருந்தது.

## 4.8 வேறு அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 963,683 பெறுமதியான காணி வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு, கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், இக்காணிக்கு எவ்வளவு காணி விடுவிக்கப்பட்டிருந்தது எனும் குறிப்பு 01.01 இன் கீழ் குறிப்பிடப்படவில்லை.

(ஆ) 1995, 2000 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கம்பனிக்குச் சொந்தமான 13.69 ஹெக்டயர் காணி அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தபோதும், அவை புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

(ஆ) கணக்கீட்டுக் குறிப்பு 01 இன் பிரகாரம், கம்பனி வேறு நிறுவனங்களுக்கு விடுவித்த 44.22 ஹெக்டயார் காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்கல் செய்யப்படவில்லை.

## 4.9 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமையப் பொது முகாமையாளர் ஒருவரை நிரந்தரமாக நியமிப்பதற்குப் பதிலாக, குறித்த தகைமைகள் அற்ற நபர்கள் பதில் கடமை அடிப்படையில் 2015 ஏப்ரலில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குக் கூடுதலாக தோட்ட அத்தியட்சகர் ஒருவரும் மற்றும் உதவித் தோட்ட அத்தியட்சகர் வேலைக்கு ஒருவரும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக இரகசியச் செயலாளர், முகாமையாளர் (விற்பனை) மற்றும் முகாமையாளர் (MIS) ஆகிய 3 புதிய பதவிகளுக்கு மூவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4.10 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின்போது நிர்மாண வேலை முடிவடைந்திருந்த மாத்தளை கம்பனிச் செயற்பாட்டு அலுவலகத்தைக் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு மாற்றஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 358 ஹெக்டேயார் நெல்உள்ள தோட்டத்தின் குத்தகைப் பணம் வழங்கப்படாமையால் குத்தகையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் அத்துமீறிய குடியேற்றவாசிகளுக்கு எதிராகச் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவும் கம்பனி தவறியிருந்தது.

(இ) இரு தோட்ட அத்தியட்சகர்களது தவறுகளுக்கு எதிராக வழக்கு விசாரைண நடைபெற்றவாறிருக்க, அவர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) செம்புவத்த தோட்டத்தில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்தை கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைத்தல் மற்றும் படகுச் சேவைக்குரிய உடன்படிக்கையின் பயன்பாடு காலம், கூட்டுறவு மற்றும் தோட்டத்திற்குரிய பணத்தை முறையாகப் பயன்படுத்தல் தொடர்பாக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) ரத்வத்த தோட்டத்தில் கராம்புக்குக் கூறு விலைகளைக் கோருகையில் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக 06 கேள்விதாரர்களிடமிருந்து சாட்சி உள்ளடக்கப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், உதவித் தோட்ட அத்தியட்சகர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் ஆகிய ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கமத்தொழில் பட்டப்படிப்பு, தேயிலை, இறப்பர், தேங்காய் போன்ற தொழில் கண்காணிப்பு மட்டத்தில் ஓராண்டு அனுபவம் என்பவற்றிற்குப் பதிலாக சாதாரண தரத்தில் மாத்திரம் சித்தியடைந்தோர் உதவித் தோட்ட அத்தியட்சகர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பம் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காமை

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமாயினும், கம்பனி நிதிக்கூற்றுக்களை கணக்கீட்டு ஆண்டு முடிவுற்று 9 மாதங்கள் 14 நாட்களின் பின்னரே சமர்ப்பித்திருந்தது.

### 5.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2011 – 2014 காலப்பகுதிக்குரிய ஆண்டறிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | காணியை விடுவித்தல், வாகனப் பராமரிப்பு, வாகனக் காப்புறுதி என்பன நலிவான மட்டத்தில் இருந்தன. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்குகள் குறிக்கப்பட்டபோதும், அவை நிறைவேறும் நடைமுறைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது. |
| (இ) | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நெடுங்காலக் கடனைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அப்பால் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது. |